தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1975 மே 2.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Intensive Cultivation Scheme for Tapioca

* 267. *Q.*—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether any Intensive Cultivation Scheme has been formulated to increase the production of Tapioca;

(*b*) if so, the details thereof; and

(*c*) the extent of additional land brought under the Scheme?

மரச்சீனி கிழங்கை அதிகமாக பயிராக்க தீவிரத் திட்டம்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மரச்சீனி கிழங்கை (Tapioca) அதிகமாக பயிராக்க தீவிரத் திட்டம் ஏதும் உருவாக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அத்திட்டத்தின் விபரம் யாது?

(உ) அத்திட்டத்தின் கீழ் கூடுதலாக பயிராகும் நிலங்களின் பரப்பளவு யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(இ) உயர்தர மரவள்ளிக் கரணைகள் வரவழைத்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

(உ) 1974-75-ம் ஆண்டில் கூடுதலாக 62,373 ஏக்கர்.

திரு. எம். சங்கரலிங்கம்: உயர் ரக மர வள்ளிக்கிழங்கு கம்புகள் வரவழைக்கப்பட்டு கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். தற்போது நமது மாநிலத்திலே கொடுக்கப்படுகின்றதாகிய மரவள்ளிக்கிழங்கு கம்பு ஒரு ஏக்கரில் எத்தனை டன் மர வள்ளிக்கிழங்கு உற்பத்தியைக் கூடுதலாகச் செய்கிறது? இந்த விதமான உயர்ரக கம்புகளால் உற்பத்தி செய்தால் கூடுதல் உற்பத்தி எவ்வளவு ஆகிறது? அது எங்கிருந்து வரவழைக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டமாகிய கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கெனவே எம். 4 என்ற மரவள்ளிக்கிழங்கு நல்ல விளைச்சலைத் தந்துகொண்டிருக்கின்றது. ஏறத்தாழ 12 டன் ஒரு ஏக்கருக்கு என்ற அளவிலே இப்போது விளைந்து கொண்டிருக்கின்றது. அதிலிருந்து எடுக்கப்பட்ட புது ரகம், எம் 4ன் பேரப் பிள்ளை என்ற அளவில் வந்திருப்பது 165 என்பது. கேரளா, தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பொதுவான ஆராய்ச்சிப் பண்ணையிலே 165 என்ற அந்த மரவள்ளிக்கிழங்கானது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. அதை விதைக்கும்போது சாதாரணமாக 20 டன் ஏக்கர் ஒன்றுக்குக் கிடைக்கிறது. அதிலும் நாம் நம் மாநிலத்திலேயே புதிய முறையில், இரட்டை இரட்டையாக நடுகின்ற விதத்தைத்தான் கண்டு பிடித்து விளைவித்துக்கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு இப்போது 30 டன் என்ற அளவுக்கு விளைகிறது.

திரு. கே. எஸ். கணபதி: இந்த வீரிய மர வள்ளிக் கரணைகள் எந்த எந்த மாவட்டங்களுக்கு வழங்கப்படுகின்றன? இதிலே மற்ற விதைகளிலே உள்ள நியூக்ளியஸ் சீட் என்று சொல்வார்களே அது போல உண்டா? இரண்டு மூன்று முறைகளுக்குப் பின்னர் அதனுடைய விளைச்சல் திறன் குறைந்து விடுவதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எம் 4 அல்லது 165 அல்லது 266 என்று வகைகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் ஒரு முறை நாம் விளைவித்த பிறகு பல தலைமுறைகளுக்கு நன்றாகவே இருக்கின்றன. முதலிலே சேலம் மாவட்டத்திலேதான் முக்கியமாகக் கொடுக்கிறோம். என்ன காரணம் என்றால் அங்கேதான் ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கருக்கு மேல் எற்கெனவே மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால் அதிலே நாளாவட்டத்திலே 'மோசைக்' என்ற சீக்கு (நோய்) பிடித்து விடுகிறது. அந்த மாவட்டத்தில் உள்ள எல்லா மர வள்ளிக்கிழங்கும் இந்தச் சீக்கிற்கு ஆளாகி விடுகின்றன. நிலத்தில் 5 அல்லது 6 ஏக்கருக்கு மேலே விளைவதில்லை. அவைகளை மாற்றி நடவேண்டும். சீக்கு பிடித்திருக்கின்ற வகைகள் பர்மா வெரைட்டீஸ்

என்று சொல்கின்ருர்கள். அவைகளை அழித்துவிட்டு அதற்குப் பதிலாக பெரிய மர வள்ளிக்கிழங்கு போடுவது என்பதுதான் முதலாவதாக நடைபெற்று வருகிறது.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: சேலம் மாவட்டத்திலே அதிகமாக மர வள்ளிக் கிழங்கு விளைகிறது. ஆகவே அந்த மரவள்ளிக்கிழங்கை அரைத்து அதிலிருந்து அரிசி செய்வதற்காக சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டு மலை அடிவாரத்தில் கூட்டுறவுத் துறையிலே மரவள்ளிக்கிழங்கு தொழிற்சாலை ஏற்படுத்துவதாக குறிப்பு இருந்தது. அது எந்த அளவிலே இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: அது பற்றி கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம்: மர வள்ளிக் கிழங்கு பயிரிடப்படுகிற முறையை ஊக்குவிப்பது, அதை உணவுப் பொருளாகத் தயாரித்து பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். ஆனல் மர வள்ளிக் கிழங்கை மாவாக்கி அதை எடுத்து ஆலைகளும், நூற்பாலைகளும், நெசவாலைகளும், பசையாக மாற்றி உபயோகிப்பதற்கு பம்பாய் போன்ற நகரங்களுக்கு, அனுப்பப்படுவதாகச் சொல்கிருர்கள். உணவுப் பற்றுக்குறை காலத்தில் கேரளாவில் அதைத் தடை செய்திருக்கிருர்கள். அதைப் போல நம் அரசும் தடை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனை அரசால் கவனிக்கப்படும். ஆனல் ஒரு வேற்றுமை இருக்கிறது. என்ன என்று கேட்டால், கேரளாவில் மர வள்ளிக்கிழங்கை ஒரு உணவுப் பொருள் என்று ஏற்றுக்கொண்டிருக்கின்ருர்கள். மத்திய அரசும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கின்ருர்கள். ஆனல் தமிழ் நாட்டில் என்ன காரணமோ தெரியவில்லை, அதை உணவுப் பொருள் என்ற அளவில் கணக்கில் எடுத்துக் கொள்ளாததால்தான் அது அதிகமாகத் தொழிற்சாலைகளுக்கு போய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றது.

Incentive Increment to B.T. Teachers

* 266. *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of B.T. teachers in the Educational District of Pudukkottai who have reached the maximum of Rs. 250 prior to 2nd October 1970, who have passed the M.A. or M.Sc. or